මහවැලි,කෘෂිකර්ම,වාරිමාර්ග සහ ග්‍රාමීය සංවර්ධනඅමාත්‍යාංශය

மகாவலி,கமத்தொழில்,நீர்ப்பாசனம் மற்றும்கிராமியஅபிவிருத்திஅமைச்சு

Ministry ofMahaweli, Agriculture, Irrigation and Rural Development

(කෘෂිකර්ම අංශය / விவசாயப்பிரிவு/ Agriculture Division)

නො. 288,ශ්‍රී ජයවර්ධනපුර මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව.
இல. 288,ஸ்ரீஜயவர்தனபுரமாவத்தை, ராஜகிரிய, இலங்கை.
No. 288,Sri JayawardenepuraMawatha, Rajagiriya, Sri Lanka.


**Translated Copy**

මගේ අංකය. / எனது இல. / My No. } **7/1/3/2020 சிறுபோகம்/ சுற்றிக்கை**

ඔබේ අංකය. / உமது இல. / Your No. }

දිනය. / திகதி. / Date. } 2020.04.21

சகல மாகாண விவசாய செயலாளர்கள்
விவசாய பணிப்பாளர் நாயகம் - விவசாயத் திணைக்களம்
ஆணையாளர் நாயகம் - கமநல அபிவிருத்தித் திணைக்களம்
பணிப்பாளர் நாயகம் - இலங்கை மகாவலி அதிகார சபை
சகல மாகாண விவசாய பணிப்பாளர்கள்
பணிப்பாளர் - தேசிய உர செயலக அலுவலகம்
நிறைவேற்று உத்தியோகத்தர்கள் - நிவாரண பசளைகளை
இறக்குமதி செய்யும் சகல உர கம்பனிகள்

**நெல், ஏற்றுமதி விவசாய பயிர்கள், பெருந்தோட்டப் பயிர்கள் முதலிய பயிர்கள் தவிர்ந்த ஏனைய பயிர்களுக்கு தேவையான இரசாயன பசளைகளை விவசாயிகளுக்கு முறையாக பகிர்ந்தளிக்கும் நிமித்தம் ஒரு வேலைத் திட்டத்தை தயாரித்தல்**

இலங்கை அரசாங்கம் வருடாந்தம் இரசாயன பசளைகளுக்கு ஏறக்குறைய 35 பில்லியன் ரூபா நிதியை செலவிடுகின்றது. இந்த நிதித் தொகையில் சுமார் 15 பில்லியன் ரூபா நெல் தவிர்ந்த ஏனைய பயிர்களுக்காக இறக்குமதி செய்யப்படும் 10 வகை பசளைகளுக்காக செலவு செய்யப்படுகின்றது. இத்தகைய பசளைகளை தற்பொழுது திறந்த சந்தையில் கொள்வனவு செய்யக் கூடிய வகையில் அதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக ஏற்படக் கூடிய பல முறைகேடுகளினால் திறந்த சந்தையில் அநேகமான சந்தர்ப்பங்களில் பசளைகளுக்கு பற்றாக்குறை ஏற்படுவதாக தெரிய வந்துள்ளது.

02. இது தொடர்பாக கௌரவ விடய அமைச்சர் அவர்கள் வழங்கியுள்ள அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க பசளைகள் ஒழுங்குறுத்தல் சட்டத்தின் 14 மற்றும் 18 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பசளைகள் தொகையளவில் பகிர்ந்தளிக்கப்படுவதை நிராகரித்தல் மற்றும் பசளைகளை தொகையாக உடமையில் வைத்திருத்தல் ஆகியன பற்றிய சட்டஏற்பாடுகளை செயற்படுத்துவது தொடர்பான கண்காணிப்பு சார்ந்த விடயங்களை துரிதப்படுத்த பொருத்தமான ஒரு வேலைத் திட்டத்தை தயாரித்தல்.

2. நெல் தவிர்ந்த ஏனைய பயிர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிவாரண பசளைகள் நிவாரணத்தின் கீழ் இறக்குமதி செய்த பசளைகளில் 50% வீதத்தை திறந்த சந்தை வசதிகளிலிருந்தும்மற்றும் எஞ்சிய 50% வீதத்தை கமநல அபிவிருத்தி நிலையங்களின் ஊடாகவும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்க பொருத்தமான ஒரு வேலைத் திட்டத்தை விரைவில் தயாரித்தல்.

3. விவசாயத் திணைக்களம், மாகாண விவசாயத் திணைக்களங்கள்மற்றும் இலங்கை மகாவலி அதிகார சபை ஆகியவற்றின் விவசாய விஸ்தரிப்பு சேவை தொடர்பான உத்தியோகத்தர்களின் அறிவுரைகள் மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றின் கீழ் செயற்படுத்தப்படும் மரக்கறி, பழங்கள் போன்ற விவசாய பயிர்களுக்கு தேவையான


දුරකථනதொலைபேசி Telephone - 011-2879048    කාර්යාලයදුරකථනதொலைபேசிTelephone-011-2872093, 011-2872097
செயலாளர්-මෙල්மின்னஞ்சல்e- mail - secretary@agrimin.gov.lkஅலுவலகம්-මෙල්மின்னஞ்சல்e- mail -info@agrimin.gov.lk
Secretaryෆැක්ස්தொலைநகல்Fax- 011-2863497    Officeෆැක්ස්தொலைநகல்Fax - 011-2868910